**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - 2023**

---

சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 3727-எஸ்ஆர்ஜ(சீஓஎல்) மற்றும் 0618 - எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய, வட மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தரமான அத்தியாவசியமான சுகாதார சேவைகளுக்கு தொடர்ச்சியான கவனிப்பு மற்றும் உலகளாவிய அணுகுதலை வழங்குதல் என்ற கருத்தின் அடிப்படையில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையின் வினைத்திறன், சமபங்கு மற்றும் பதிலளிக்கக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் ரூபா 5,813 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 37.5 மில்லியன் சலுகை கடனாகவும் ரூபா 1,938 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 12.5 மில்லியன் மானியமாகவும் என ரூபா 7,125 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் கூட்டுமொத்த தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 திசெம்பர் 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2023 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான

கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 4.2.3 ஆம் பிரிவு | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், தம்புள்ளை பொது வைத்தியசாலைக்கான அல்ட்ராசவுண்ட் ஸ்கானர் (Ultrasound scanner) உயர்தர இயந்திரத்தின் கொள்வனவு 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் இருந்து 11 மாதங்கள் தாமதம் ஏற்பட்ட போதிலும் பெறுகை செயன்முறை பூர்த்தி செய்யப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2023 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் மறுபயன்பாட்டு நிதியிலிருந்து அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான முன்னுரிமை மற்றும் முதலில் திட்டமிடப்பட்ட பொதிகள் இந்தக் காரணத்தால் தாமதமாகியிருந்தன. | பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை விதிமுறைகளின் (குறிப்பு விதிமுறைகள்) பிரகாரம், உண்மையான ஆலோசனை சேவையின் காலம் 2023 மார்ச் முதல் 2024 யூன் வரை (15 மாதங்கள்) இருக்க வேண்டும். எனினும், கணக்காய்வு திகதி வரை, தொற்று நோய்களுக்கான தேசிய நிறுவன வளாகத்தை நிர்மாணிப்பதற்காக எந்த ஆலோசனை நிறுவனமும் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | தொற்று நோய்களுக்கான தேசிய நிறுவனத்திற்கான (NIID) புதிய ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்கான ஆலோசனைப் பணிகளுக்காகவும், நான்கு மாகாணங்களின் சிவில் பணிகளின் சமநிலை மேற்பார்வை பணிகளுக்காகவும் ஆர்வத்தை வெளிப்படுத்துதல் கோரப்பட்டது. நான்கு மாகாணங்களின் சிவில் பணிகளின் மேற்பார்வை பணியின் சமநிலைக்கு முன்மொழிவுகள் அழைக்கப்பட்டன, மேலும் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்குப் பின்னர், அமைச்சரவை நியமித்த ஆலோசனை பெறுகை குழுவால் விலை முன்மொழிவுகள் திறக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. நிதிப் பற்றாக்குறை காரணமாக ஆலோசனைப் பணியின் செயன்முறையை நடாத்துவதற்கும் ஆலோசனைப் பணிக்கான ஏனைய விருப்பங்களைக் கருத்தில் கொள்வதற்கும் முடிவுசெய்யப்பட்டது. | உரிய காலத்தில் பணிகளை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு 18 கையடக்க அல்ட்ராசவுண்ட் ஸ்கானர்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 48.6 மில்லியன் மதிப்பிடப்பட்டது. இதற்காக, முதல் விலைமனு இரத்து செய்யப்பட்டு, இரண்டாவது அழைக்கப்பட்ட விலைமனுவின் பிரகாரம் குறைந்த விலைமனு மதிப்பிடப்பட்ட விலையை விட ரூபா 88 மில்லியன் அல்லது 81 சதவீதம் அதிகமாக இருந்தது. மேலும் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்தது. எனினும் முதல் முறையாக அழைக்கப்பட்ட கேள்விகளை இரத்து செய்ததற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வியின் செல்லுபடியாகும் காலாவதி திகதிக்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் ஒத்துழைப்பை இந்த செயற்திட்டத்தால் பெற முடியவில்லை. எனவே, பொதி இரத்து செய்யப்பட்டு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் மீள்கேள்விக்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அபெக்ஸ் மருத்துவமனைகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக அளவு அதிகரிக்கப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாயின் பெறுமதி சரிவினால் ரூபாயின் இலாபத்தில் இருந்து பொதியின் மேலதிக செலவை ஈடுசெய்ய முடிந்தது. | ஒதுக்கப்பட்ட வரம்புக்குள் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 09 வான்கள் 2021 ஆம் ஆண்டில் பொது சுகாதார விழிப்புணர்வு நோக்கத்திற்காக ரூபா 87 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது, எனினும் அந்த வான்களில் நிறுவப்பட வேண்டிய பொது முகவரி சாதனங்கள் கொள்வனவு செய்யப்படாததால், வான்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாததுடன் ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டன. | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக இந்த வாகனங்களைப் பயன்படுத்துவது செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது, சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார அதிகாரிகள் மாத்திரமே விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு வாகனங்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்ய முடியும். | சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட வேண்டும். |